ORIGINAL ARTICLE

# தமிழர்களின் திருக்கோவில் நிர்வாகம் [THAMIZARIN THIRUKVIL NIRVAGAM]

## TEMPLE ADMINISTRATIVE SYSTEM OF TAMILS

**மு.கயல்விழி [1] / M.Kayalvizhy [1]**

[1] உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம், தமிழ்நாடு
Assistant Professor, Department of Tamil, Pachayappas College for Women, Kancheepuram, Tamil Nadu. E-Mail: kayalarul22@gmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/73

**ஆய்வுச் சாரம்**

தமிழ் மன்னர்கள் ஆலயங்கள் கட்டுவதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டினர். சைவ, வைணவ கோயில்களைக் கட்டுவித்ததுடன் அவற்றை முறையாகப் பராமரிக்கவும் மன்னர்கள் ஏற்பாடு செய்தனர். இதற்கென தனி நிர்வாக அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. நாட்டில் பெரும்பான்மையான கோயில்கள் மன்னர்களாலே கட்டப்பட்டதுடன் அவற்றை நிர்வகிக்க நிர்வாக அமைப்புகளும் அமைக்கப்பட்டன. அளவில் பெரிய கோயில்களை நிர்வகித்த அதிகாரிகள் ஸ்ரீகாரியம், கோயில் கணம், பாத மூர்த்தி என்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர். சில சமயம் மடங்கள் கோயில்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்து நிர்வகித்தன.கோயில் வருவாய்க் கேற்றவாறு பணியாளர் எண்ணிக்கையும் வேறுபட்டது. கோயில் கணக்கு வழக்குகள் அடங்கிய புத்தகம் ஸ்ரீபண்டாரப் புத்தகம் என்று அழைக்கப்பட்டது. அக்காலத் திருக்கோயில்கள் நாட்டின் உயரிய நன்மதிப்பைப் பெற்றிருந்தன. இவை ஆன்மிகத்தை வழங்கும் நிலையங்களாகச் செயல்பட்டதோடு, சமூகப் பணியாற்றும் சமூக நிலையங்களாகவும் திகழ்ந்தன. திருக்கோயில்கள் மருத்துவ மனைகளை இலவசமாக நடத்தி மக்களின் பிணியைப் போக்கின.

**கருச்சொற்கள்:** கோவில் நிர்வாக அமைப்புகள், ஸ்ரீகாரியம், ஸ்ரீபண்டாரப் புத்தகம், சமூகப் பணி, மருத்துவ மனை, ஆடல், பாடல் கலை நிகழ்வு, சரஸ்வதி பண்டாரம்.

**Abstract**

Our ancient Tamil people's temple administration system is one of the most efficient administrative system in India. The Tamil kings constructed a systematic arrangement in the temple administration. The temple official was called as "sri Kariyam" and the account book were called as "Sri Pandara Pusthagam". There were number of workers employed in the temples. In the temples holy hymns of Siva and Vishnu were sung. The holy singers were called as "uvachers". The temples were served as hospitals and schools at that time. The temples had libraries and it was called as Saareswathi Pandurams. In the temples poem were composed, dances were enact and plays were enacted. So the temple took a prominent part in the lives of ancient Tamil peoples. Our Tamil peoples temple administration system is the exact example for the efficient administrative systems of Tamils.

**Key words:** Temple administration, systematic administration, social activities, schools libraries, hospitals, numbers of workers, dance and music, poems composed, efficient administrative system.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 15th January 2020, revised 9th February 2020, accepted 21th February 2020

**முன்னுரை**

"ஆலயம் தொழுதல் சாலவும் நன்று" என்பார் ஔவையார். எனவே ஆலயம் தொழுதலை வாழ்வின் இன்றியமையாக் கடமையாகத் தமிழர்கள் கருதினர். ஆலயங்கள் பழங்காலம் தொட்டுத் தமிழர் வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருந்தன (Venkata Ramanyya, 1930)[1]. எனவே, தமிழ் மன்னர்கள் ஆலயங்கள் கட்டுவதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டினர். பண்டைய ஊர்களில் கோயில்கள் இல்லா ஊரைக் காணவியலாது. அவை அவ்வூர் மக்களின் சமூகப், பொருளாதார, சமயச் செயல்பாட்டுக் களமாய்த் திகழ்ந்தன. எனவே பல்வகை சிறப்புடைய கோயில்களை சிறப்புடன் நிர்வகிப்பது மிகவும் இன்றியமையாததாயிற்று. தமிழர்கள் திருக்கோயில்களை சிறப்புடன் நிர்வகித்ததனால் அவை நன்முறையில் செயல்பட்டுச் சமயப் பணியாற்றி நாட்டில் தெய்வீகத்தையும், பொது மக்களிடம் ஆன்மிகத்தையும், தனி மனிதரிடத்து ஒழுக்கத்தையும் வளர்த்தன.

**திருக்கோயில் நிர்வாகம்**

பண்டைய தமிழர் வாழ்வில் சமயங்கள் இன்றியமையாத இடம் பிடித்தன (Pillai, 1975)[2]. அக்காலத்தில் சைவமும், வைணவமும் தமிழ் நாட்டில் சிறப்பிடம் பெற்றிருந்தன. அவை தமிழர்களின் இரு கண்களாகத் திகழ்ந்தன (Swaminathan, 1991)[3]. பௌத்த, சமண சமயங்கள் நாட்டில் இருந்த போதிலும் அவை சிறிய அளவிலே காணப்பட்டன. எனவே சைவ, வைணவ கோயில்களை கட்டுவித்ததுடன் அவற்றை முறையாகப் பராமரிக்கவும் மன்னர்கள் ஏற்பாடு செய்தனர். இதற்கென தனி நிர்வாக அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. சைவ, வைணவ ஆலய நிர்வாகத்தில் ஈடுபட்டு முனைப்பு காட்டிய அவர்கள் சமண, பௌத்த ஆலயங்களை அதன் போக்கிற்கே விட்டு விட்டனர். நாட்டில் பெரும்பான்மையான கோயில்கள் மன்னர்களாலே கட்டப்பட்டதுடன் அவற்றை நிர்வகிக்க நிர்வாக அமைப்புகளும் அமைக்கப்பட்டன. கோயில் நிர்வாகிகள் நாட்டின் முக்கிய அதிகாரிகளாய்க் கருதப்பட்டனர். கோயில் நிர்வாகிகள் கோயில் சார்ந்த சமயத்தவராகவே காணப்பட்டனர். அவர்கள் “திருக்கோயில் மகேஸ்வரர்கள்” என்று சிறப்புடன் அழைக்கப்பட்டனர்.

கோயில்களின் அளவுக்கேற்ப நிர்வாகத்தின் எண்ணிக்கையும் அமைக்கப்பட்டன. அளவில் பெரிய கோயில்களை நிர்வகித்த அதிகாரிகள் ஸ்ரீகாரியம், கோயில் கணம், பாத மூர்த்தி என்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர். சில சமயம் மடங்கள் கோயில்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்து நிர்வகித்தன. சான்றாகத் திருவாடுதுறை, தருமபுரம் போன்ற ஆதீனங்கள் பல கோயில்களை உரிமையாகக் கொண்டிருந்ததைச் சான்றாகக் கொள்ளலாம். அளவில் மிகப் பெரிய தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், கங்கை கொண்ட சோழீஸ்வரம், மதுரை மீனாட்சியம்மன் கோயில் போன்றவற்றை நிர்வகிக்க பண்டாரிகள் என்ற சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலை பாவூர் கிழவன் அரவணையன் மாலரி கேசவன் என்பவனும், கங்கை கொண்ட சோழீஸ்வரம் கோயிலைத் தென்னவன் மூவேந்தன் வேளாண் என்பவனும், திருவாரூர் கோயிலை நம்பன் ராமனான மூவேந்தன் வேளான் என்பவனும் அக்காலத்தில் சிறப்புடன் நிர்வகித்தனர் (History of Tamil Nadu - Chola Period. 2000)[4]. இவர்கள் அக்கோயில்கள் தினசரி பூஜைகளையும், சிறப்பு பூஜையும் திருவிழாக்களையும் படிம ஊர்வலங்களையும் நடத்தி வந்தனர். இது தவிர கோயில் கணக்கு வழக்குகளையும் சரிபார்த்தனர். இக்கணக்கு வழக்குகள் அடங்கிய புத்தகம் ஸ்ரீபண்டாரப் புத்தகம் என்று அழைக்கப்பட்டது.

ஆண்டு தோறும் கோயில் கணக்குள் தணிக்கை செய்யப்பட்டன. இவற்றை அரசு அலுவலர்கள் தணிக்கை செய்தனர். கணக்கு வழக்குகளில் தவறிழைப்போர் பாரபட்சமின்றி கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். கோயிலுக்கு வழங்கப்படும் தானங்கள் பெறுவதிலும், அவற்றை முறையாகப் பராமரிப்பதும் கோயில் நிர்வாகிகளின் முதன்மைப் பணியாகும். கோயிலுக்கு வழங்கப்படும் நிலங்களைக் குத்தகை விட்டு அவற்றின் வருவாயை முறையாகப் பெருவதும் இவர்களின் பணியே. கோயில் நிலங்களை விற்கவும், வாங்கவும் இவர்களுக்கு

உரிமை வழங்கப்பட்டிருந்து. திருக்கோயில்களில் பூஜைகள் முறையாக நடத்தவும் அவ்வாலயங்களில் பணிபுரிவோருக்கு ஊதியம் வழங்கும் பணியையும் இவர்கள் செய்து வந்தனர். இக்கோயில் நிர்வாகிகளுக்கு உதவி புரிய ஸ்ரீமகேஸ்வரர், கோயில் முதல்கரணம், தேவகன்மிகள் போன்ற அலுவலர்கள் பணியாற்றி வந்தனர்.

**திருக்கோயில் பணியாளர்கள்:**

அக்காலத்தில் திருக்கோயில் பணியென்பது புனிதப் பணியாகக் கருதப்பட்டது. எனவே, ஆர்வமுடன் அப்பணியை ஏற்க மக்கள் முன்வந்தனர். நாடு முழுவதுமுள்ள ஆலயங்களில் பணிபுரிய பல பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். தகுதியும், திறமுடையவர்களே பணியாளர்களாய்த் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் முழு நேரப் பணியாளர்களாகப் பணிபுரிந்தனர். அவர்களுக்கு முறையாக ஊதியம் கோயில் வருவாயினின்று வழங்கப்பட்டது. பல கோயில்களில் நூற்றுக்கணக்கான பணியாளர்கள் பணிபுரிந்தனர்.(சான்று:-தஞ்சை பெரிய கோயிலில் 600 பேர் பணியாற்றி வந்தனர்). நட்டுவம், நிறுத்தப் பேரரையன், வக்கி பட்டலகன், நாடக மைய்யின், வாத்தியமாரன், உடுக்கை வாசிப்போர், வீணை வாசிப்போன், ஆரியம் பாடுவோன், தமிழ்ப் பாடுவோன், பக்க வாத்தியன், கொட்டி மத்தளமிசைப்போன், முத்திரைச் சங்கு ஊதுவோன், கந்தர்வன், வலங்கை வேளைக்காரன், பரிக்காரன், திருவாய்க்கேழ்வி, கணக்கு எழுதுவோன், சகடைக் கோட்டிகள், வரிக்குடையோன், நீர் தெளிப்போன், சன்னாலியன், திருமடைப்பள்ளி குசவன், வண்ணத்தார்கள், கோலின்மை செய்வோர், அம்மட்டன், தய்யான், ரத்தினம் தய்யான், கண்ணான், தச்சரியன், பாணன், பிடாரன், திருப்பதியம் விண்ணப்பிப்போன், மகேஸ்வரன், பரிசாரகன், மெய்க்காவலன், விளக்கேற்றுபவன், பள்ளித்தாமம் ஆக்குவோன், சிற்பிகள், ரதக்கார்கள், பொற் கொல்லர்கள், கொல்லர், தேவரடியார், இஷபத் தளியிலார், பதியிலார், பிராமணர் போன்றோர் திருக்கோயில்களில் பணியாற்றினர்.

கோயில் வருவாய்க்கேற்றவாறு பணியாளர் எண்ணிக்கையும் வேறுபட்டது. கோயில் நிர்வாகப் பொறுப்பில் இருந்தவர்கள் சிலர் அகநாழிகைப் பணிசெய்வோர், பஞ்சகவ்யம் தெளிப்போர், பூத்தொண்டு செய்வோர், இசைக்காரர், சட்டர்கள் பற்றியச் செய்திகள் கிடைத்துள்ளன. படைத்தலைவர்கள் சிலறும் திருக்கோயில் நிர்வாகத்தில் ஈடுபட்டனர் என்பது பட்டயங்கள் மூலம் அறியக்கிடக்கின்றது (Subramaniyan, 1999)[5]. திருக்கோயில் பணியில் தவறுவோர் உடனடியாகப் பணியினின்று நீக்கப்பட்டுப் புதிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர் (SII.Vol.11.No:66). பொதுவாக, கோயில்கள் உள்ள ஊரில் உள்ளவர்களே பணி செய்ய தெரிவு செய்யப்பட்டனர். தேவைப்படின் வேறு ஊர்களிலிருந்தும் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டுப் பணியமர்த்தப்பட்டனர்.

**திருக்கோயில் நிகழ்வுகள்:**

தமிழகத் திருக்கோயில்கள் ஆன்மிகக் களங்களாகத் திகழ்ந்தன. இங்கு தினசரி பூஜைகளும். திருவிழாக்களும் தொய்வர நடைபெற்றன. கோயில்களில் ஆறுகால பூஜைகளும் சிறப்புடன் நடத்தப்பட்டன. இப்பணிகள் தொய்வர நடைபெற ஏராளமான நிலங்கள் நிவந்தங்களாக வழங்கப்பட்டன. கால்நடைகளான ஆடுகளும், மாடுகளும் தானமாகக் கோயில்களுக்கு வழங்கப்பட்டன. அரசினரும், தனியரும் ஏராளமான நன்கொடைகளைக் கோயில்களுக்கு வாரி வழங்கினர். இது தவிர நாட்டில் குற்றம் இழைப்போரும், தவறு செய்பவரும் தண்டிக்கப்பட்டு அவர்கள் சொத்துக்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டுக் கோயிலுக்கு வழங்கப்பட்டன. இதனால், கோயில்களில் செல்வம் பெருகியது. கோயில்களில் ஆடல், பாடல் கலை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. இந்நிகழ்வில் தேவரடியார்கள், இஷபத் தளியிலார், பதியிலார் போன்றோரின் நடன நிகழ்வுகள் நடந்தன (A.R.E.No:206/1931). இசை வல்லுனர்களின் இன்னிசைக் கச்சேரிகளும் இங்கு நிகழ்த்தப்பட்டன. இதற்கென நடன மண்டபங்கள் கட்டப்பட்டன.

திருக்கோயில்களில் தினமும் திருப்பதிகம் ஓதப்பட்டன (A.R.E. No:349/1918). சைவ ஆலயங்களில் சைவத் திருமுறைகளும், வைணவ ஆலயங்களில் திவ்யப் பிரபந்தங்களும் ஓதப்பட்டன. இதற்காக ஓதுவார்கள் கோயில்களில் நியமிக்கப்பட்டனர் (SII.Vol.13.No:74). கோயில்களில் திருமுறைகள் ஓதும் பொழுது உவச்சவர்கள் இன்னிசைக் கருவிகளைக் கொண்டு இசை முழக்கினர் (SII.Vol.23.No:86). அக்காலத்தில் பலவிதமான இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன. உடுக்கை, மத்தளம், தாளம் போன்ற கருவிகள் இன்னிசை முழங்கின. கோயில் திருப்பணி செய்யும் இசை வல்லுனர்களுக்குத் “திருப்பதியக் காணி" என்ற நிலங்கள் மானியங்களாக வழங்கப்பட்டன (A.R.E.No:65/1914). கோயில்களே பொது மக்களின் பொழுது போக்குப் புகலிடம் என்பதால் நடன மண்டபம், நாடக மண்டபம், திருக்கோயில் மண்டபம், நுற்றுக்கால் மண்டபம் போன்ற மண்டபங்கள் கட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. இது தவிர கோயில்களில் யாகபூஜைகள் நிகழ்த்த யாகசாலைகளும் கட்டப்பட்டன. அக்காலத் திருக்கோயில் பணிகள் ஒளிவு மறைவின்றி நடைபெற்றதால் தவறுகள் ஏதும் நடைபெற்றதாகச் சான்றுகளில்லை.

**கோயில் இணை செயல்பாடுகள்:**

அக்காலத் திருக்கோயில்கள் நாட்டின் உயரிய நன்மதிப்பைப் பெற்றிருந்தன. இவை ஆன்மிகத்தை வழங்கும் நிலையங்களாகச் செயல்பட்டதோடு, சமூகப் பணியாற்றும் சமூக நிலையங்களாகவும் திகழ்ந்தன. திருக்கோயில்கள் மருத்துவமனைகளை இலவசமாக நடத்தி மக்களின் பிணியைப் போக்கின. அவை ஆதூர சாலைகள் என்று அழைக்கப்பட்டன. இங்கு மருத்துவர்களும், பணியாளர்களும், நியமிக்கப்பட்டுப் பணிபுரிந்தனர். கோயில் வருவாயின்று

இவர்களுக்கு ஊதியமும் வழங்கப்பட்டது. இவ்விடத்தில் நோயாளிகளுக்கு உரிய படுக்கை வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. சான்றாகத் தஞ்சை பெரிய கோயில் அருகில் சுந்தர சோழ விண்ணகர ஆதூர சாலையும் (A.R.E.No:248/1923). திருமுக்கூடல் திருமால் கோயில் அருகில் மருத்துவ மனையும் செயல்பட்டதைக் கொள்ளலாம் (A.R.E.No:365/1917). மேலும், திருக்கோயில்களை ஒட்டியே மடங்களும் அமைந்திருந்தன. அவை மடாதிபதிகளால் நிர்வகிக்கப்பட்ட போதிலும் அவை அக்கோயில்களுடன் இணைந்து செயல்பட்டன. இம்மடங்கள் தமிழ்க் கல்வியை வளர்க்கும் கல்வி நிறுவனங்களாகச் செய்யப்பட்டன. இதற்குச் சான்றாகத் திருவாவாடுதுறை தருமபுரம் மற்றும் குன்றக்குடி ஆதீன மடங்களைக் கொள்ளலாம்.

இது தவிர கோயில்கள் கலாச்சார மையங்களாகவும் செயல்பட்டன (Sathasiva Pandarathar, 2008)[6]. அங்கு பல்வேறு இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டுப் பாட்டும், பரதமும் வளர்க்கப்பட்டன. இவ்விடத்தில் பணிபுரிவோர் கந்தர்வர் என்று அழைக்கப்பட்டனர். (Balasubramanyan, 1978)[7]. இது தவிர கோயில்கள் சிறந்த நூலகங்களாகவும் செயல்பட்டன. பழைய ஓலைச்சுவடிகள் யாவும் இங்குப் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டன (Neelakanta Sastri, 1975)[8]. இவை சரஸ்வதி பண்டாரம் என்று அழைக்கப்பட்டன. சான்றாகத் சிதம்பரம் நடராஜர் கோயிலில் செயல்பட்ட ஓலைச்சுவடி நூலகத்தைக் கொள்ளலாம். கோயில்கள் நூல்கள் அரங்கேற்றும் அவைகளாகவும் செயல்பட்டன. பல புதிய நூல்கள் இங்கு அரங்கேற்றப்பட்டன. இந்நூல்களை இயற்றும் புலவர்கள் கோயில் நிர்வாகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

அக்காலத்தில் திருக்கோயில்கள் மக்கள் கூடும் சமுதாய இடமாகவும் செயல்பட்டன. ஊர் கூட்டங்கள் யாவும் இங்கு நடத்தப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன (SII.Vol.5.No:50). பஞ்சம் போன்ற இயற்கை சீற்றம் ஏற்பட்ட காலத்தில் கோயில்கள் மக்களுக்கு உணவளித்து காத்தன. வாழ்க்கையில் துன்புற்றுக் புகலிடம் நாடி வருவோருக்குப் புகலிடம் வழங்கும் நிலையங்களாகவும் அக்காலக் கோயில்கள் திகழ்ந்தன. கோயில்களுக்குத் தானமாக வழங்கப்படும் கால்நடைகளைப் பராமரிப்போர், கோயில் நிலங்களைப் பயிரிடுவோர், கோயிலில் ஊழியம் புரிவோர் என்று கோயில் சார்ந்து பணிபுரியும் பல பேருக்கு வாழ்வளிக்கும் நிறுவனங்களாகவும் தமிழகத் திருக் கோயில்கள் செயல்பட்டன. திருக்கோயில்களை மட்டுமே நம்பி பல குடும்பங்கள் வாழ்க்கை நடத்தி வந்தன.

**முடிவுரை:**

“கோயில் இல்லாத ஊர் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. தமிழரின் உடல், பொருள், ஆவி அனைத்திலும் கோயில்கள் அணுக்கமான தொடர்பு கொண்டிருந்தன. எனவே, கோயில்களைக் கட்டுவதிலும், பராமரிப்பதிலும் அரசர்களும், செல்வர்களும், உயர் குடியினரும் மிகுந்த ஆர்வம் காட்டினர். இதனால் திருக்கோயில்கள் செல்வத்திலும், செல்வாக்கிலும் செழித்தன. அரசர்களே கோயில்களைக் கண்டு அஞ்சி நடக்கும் நிலை இருந்தது. நாடு

முழுவதும் கோயில் நிர்வாகம் முறையாக நடைபெற்றது. திருக்கோயில்களை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வந்தது. எனவே அவை சிறப்புடன் செயல்பட்டு மக்களுக்கு ஆன்மீகத்தையும், அறிவையும் ஊட்டின. மேலும் அவை பலவகையான சமூகத் தொண்டாற்றின. பழம் தமிழ் கலைகள் வளர்ப்பதிலும், தமிழ்க் கல்வி வளர்ப்பதிலும் திருக்கோயில்கள் பெரும்பங்காற்றின. நாடு முழுவதுமுள்ள பழந்தமிழ் கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் மூலம் அக்கால மக்கள் திருக்கோயில்கள் மீது எத்துணை அக்கறையும், நாட்டமும் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம். பழந்தமிழரின் தலை சிறந்த நிர்வாகத் திறனுக்கு அவர்கள் செயல்படுத்திய திருக்கோயில் நிர்வாகமே சாலச் சிறந்த சான்றென்றால் அது மிகையாகாது.

**சுருக்கம் (Abbrevations):-**

1. ARE-Annual Report on Indian Epigraphy
2. SII-South Indian Inscriptions

**துணை நூற்பட்டியல்:**


1. Venkata Ramanyya, N. (1930), *An essay on the origin of the South Indian temple*. Chennai: University of Madras.
2. Pillai, K. K. (1969). *A social history of the Tamils*. Chennai: University of Madras.
3. Swaminathan, A. (1991). *Social and cultural history of Tamil Nadu*. Chennai: Deepa Publications.
4. *History of Tamil Nadu-Chola Period (தமிழ் நாட்டு வரலாறு- சோழர் காலம்)*. (2000). Chennai: Tamil Nadu Text Book Society.
5. Subramaniyan, T. N. (1966). *Thirty Pallavas copper plates (பல்லவர் செப்பேடுகள் முப்பது)*. Chennai: International Institute of Tamil Research.
6. Sathasiva Pandarathar, T. V. (2008). *History of later Cholas (பிற்காலச் சோழர் சரிதம்)*. Chithambaram: Annamalai University.
7. Balasubramanyan, M. (1979). *Cholas political cultural history (சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு)*. Chennai: Tamil Nadu Text Book Society.
8. Neelakanta Sastri, K. A. (1975). *The Cholas*. Chennai: University of Madras.